**மதுராவல பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுராவல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 4,000,000 தொகையும் அதன் செலவினங்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிராத பல்வேறு வைப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு இதில் இருந்து செலவினங்கள் ஏற்கப்பட்டிருந்தன.

(ஆ) பதிவுப் பொருட்களின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 389,863 தொகையான பொருட்கள், இருப்பு மீதிக்கு உள்ளடக்கிக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அதே தொகையால் இருப்பு மீதியும் ஆண்டிற்கான மிகையும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேதனப் பசளைப் பிரிவில் காணப்பட்ட ரூபா 48,000 தொகையான உரப் பொதிகளின் இருப்பும், சபையின் உப அலுவலகங்களில் காணப்பட்ட எஞ்சிய இருப்பும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் சுடுகாட்டிற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 18,267 தொகையான வாயுவுடனான 03 சிலிண்டர்கள் இருப்பு மீதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் படி, மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும்

கைத்தொழில் கடன்பட்டோர் மீதி முறையே ரூபா 17,838,432 தொகையாகவும், ரூபா 2,853,258 தொகையாகவும், ரூபா 3,497,958 தொகையாகவும் இருந்த போதிலும் இவற்றிற்கு உரித்தான துணைப் பதிவேடுகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 15,217,890 தொகையாகவும், ரூபா 1,574,952 தொகையாகவும், ரூபா 1,900,251 தொகையாகவும் காணப்பட்டது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,804,723 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,192,306 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாடுப் பற்றாக்குறை/ குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வரகாகொட உப அலுவலகத்தின் சேகரிப்புக் கணக்கில் (நடைமுறைக் கணக்கின்) மீதியான ரூபா 247,455 தொகை 03 மாதங்களிற்கு அதிகமான காலமாக எவ்வித பயன்பாடும் இன்றி விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) ஊழியர் கடன் மீதியில் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிராத ரூபா 90,003 தொகையான கடன் மீதி காணப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 1,175 | 891 | 973 |
| (ii) | வாடகை | - | - | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 240 | 175 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 506 | 1,000 | - |

**2.3.2 வீதவரி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 766,828 தொகையான வீதவரி மீதியில் ரூபா 427,648 தொகையும், ரூபா 87,590 தொகையான ஏக்கர் வரி மீதியில் ரூபா 1,863 தொகையும் 2015 யூன் 20 ஆம் திகதி வரையில் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 குறைந்த பயன்பாட்டுடனான சொத்துக்கள்**

கொங்கிரீட் தூண்கள் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது உற்பத்தி செய்யப்பட்டிருந்த 200 கொங்கிரீட் தூண்கள் கணக்காய்வுத் தினம் வரையிலும் 36 தூண்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. ரூபா 74,383 பெறுமதியான எஞ்சிய 164 தூண்களும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது காணப்பட்டன.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

(அ) ரூபா 109,702 தொகையான செலவினத்தை ஏற்று சபைக்காக வாகன சேவையிடல் பகுதி ஒன்றை (சேர்விஸ் பிரிவு) நிர்மாணிப்பதற்காக 2013 யூன் 10 ஆம் திகதி வேலை முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் இது சபையின் வாகன சேவையிடப்படுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. சுபையின் சகல வாகனங்களும் பணம் செலுத்தப்பட்டு வெளி நிறுவகங்களில் சேவையிடப்பட்டிருந்ததுடன் எளிதாக சபையால் சேவையிடப்பட்டிருக்கக் கூடிய சபையின் முச்சக்கர வண்டியும் வெளி நிறுவகங்களால் சேவையிடப்பட்டு 05 மாதங்களிற்குள் 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 18,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 15 மில்லியன் தொகையான ஏற்பாட்டின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த சுடுகாட்டை நிர்மாணிப்பதற்காக மண் பரிசோதனைக் கட்டணமாக ரூபா 60,000 தொகை செலுத்தப்பட்டு நிர்மாணிப்புகளின் பின்னர் கைவிடப்பட்டிருந்தன.

(இ) மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்திற்காக தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுவதற்காக பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 19,706 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் எதுவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நூலகப் புத்தகங்கள் கணனி மயமாக்கப்படும் மென்பொருள் ஒன்றை விநியோகிப்பதற்கும் ஆலோசனைக் கட்டணத்திற்காகம் 2014 யூன் 09 ஆம் திகதி ரூபா 10,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 மே 06 ஆம் திகதி வரையிலும் இது பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

### (அ) காணிகள் ஏலவிற்பனையிடல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம், சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் காணி ஏலவிற்னை செய்யப்படுகையில் ஏலவிற்பனை செய்யப்படும் காணிகளின் விற்பனை செய்யப்படும் விலையில் 1 சதவீத வருமானம் சபையால் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது சபையின் வருமானம் நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்டிருந்த மொத்த மதிப்பீட்டில் 1 சதவீதமாக ரூபா 1,011,977 தொகை 03 காணி விற்பனையில் இருந்து 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பீட்டிற்கும் சந்தை விற்பனைப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு சீராக்கப்பட்டு எஞ்சிய பணம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல்

2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு அதிகாரம் செயற்படுத்தப்படுவது தொடர்பான ஆலோசனைக் கோவையில் காண்பிக்கப்பட்டவாறு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் அதிகார எல்லைக்குள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டியதாக சபையால் இனங்காணப்பட்டுள்ள 42 நிறுவகங்களில் கணக்காய்வுத் தினமாகிய 2015 மார்ச் 31 ஆம் திகதி வரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 19 நிறுவகங்களால் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, 23 கைத்தொழில்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாது செயற்பட்டிருந்தன.

### (இ) திட்டக்குழு செயற்பட்டிராமை

சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட காணித் துண்டுகளின் திட்டங்களை அங்கீகரித்துக்கொள்வதற்கும் கட்டிட விண்ணப்பங்களை அங்கீகரித்துக்கொள்வதற்கும் திட்டக் குழு ஒன்று செயற்படுத்தப்பட்டிராததுடன் 2014 ஆம் ஆண்டின் போது மாத்திரம் 246 காணிக் கூறாக்கல் திட்டங்களும் 112 கட்டிட விண்ணப்பங்களும் குழு அங்கீகாரம் இன்றி தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையில் மாத்திரம் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### (ஈ) சேதனப் பசளை உற்பத்தி

2015 ஏப்ரல் 30 ஆம் திகதி சேதனப் பசளைப் பிரிவுப் பரிசோதனையில் அதனைப் பொதி செய்வதற்கு ஆயத்தமான பசளை இருப்பும், பொதியிடப்பட்ட 25 கிலோ கிராம் கொண்ட 08 பொதிகளும் 05 கிலோகிராம் கொண்ட 28 பொதிகளும் 02 கிலோகிராம் கொண்ட 05 பொதிகளும் காணப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சேதனப் பசளைகள் பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்டு பொதியிடப்பட்ட இருப்பு மற்றும் வழங்கல்கள் தொடர்பாக இருப்புப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) விற்பனைக்காக உப அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த சேதனப் பசளைப் பொதிகள் இருப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இருப்புப் பெறுவனவுகள், வழங்கல்கள் சரியாக பதிவு செய்யப்பட்டிராமையால் இருப்புப் புத்தகத்தில் மறைப் பெறுமதி நிலவிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**(உ) வாகனப் பழுதுபார்த்தல்கள்**

சில செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகை மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 20 சதவீதத்தை மிகைத்தலாகாத போதிலும் மூன்று சந்தர்ப்பங்களின் போது ஜேசீபீ இயந்திரத்தின் ரூபா 248,472 தொகையான மதிப்பிடப்பட்ட பழுதுபார்த்தல் செலவினத்தில் ரூபா 186,549 தொகை அதாவது 75 சதவீதம் முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு**

(i) வருடாந்த பாதீட்டின் மூலம் 09 மூலதனச் செலவினத் தலைப்புகளிற்காகவும் 09 மீண்டெழும் செலவினத் தலைப்புகளுக்காகவும் முறையே ரூபா 50,401,500 தொகையும் ரூபா 27,000 தொகையுமான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் எந்தத் தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 28,192,100 கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 37 செலவின விடயங்களில் ரூபா 5,461,500 தொகை வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னரும் மேலும் அச் செலவின விடயங்களில் ரூபா 612,844 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டிற்காக வீதி அமுத்தி, ஜேசீபீ இயந்திரம் மற்றும் நீர் மோட்டார் வாடகைக்கு வழங்குவதன் மூலம் ரூபா 13 மில்லியன் தொகையான வருமானம் உழைக்கப்படுவதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அவற்றிலிருந்து உழைக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 512,335 தொகை மாத்திரமேயாகக் காணப்பட்டமையால் ரூபா 12,487,665 தொகையான மிகை மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2014 ஆம் ஆண்டிற்காக ஜேசீபீ இயந்திரத்தின் வருமானம் ரூபா 421,000 தொகையானதுடன் இயந்திரத்தைத் திருத்துவதற்காக ரூபா 678,561 தொகையும், 550.35 மீட்டர் மணித்தியாலத்திற்காக எரிபொருள் செலவினம் ரூபா 558,052 தொகையும் செலவிடப்பட்டிருந்தமையால் வருமானத்தை விஞ்சிய செலவினம் ஏற்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) 2014 ஆம் ஆண்டின் பாதீட்டின் படி, வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரியாக ரூபா 440,000 தொகையும், வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 350,000 தொகையும் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், இறுதிக் கணக்கிற்காக மதிப்பிடப்பட்ட வருமானமாக முறையே ரூபா 367,000 தொகையும் ரூபா 250,000 தொகையும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(எ) நட்டங்களும் இழப்புகளும்**

வரகாகொட மக்கள் நூலகத்தில் 2013 ஆம் ஆண்டின் போது பொருள் மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்ட 1063 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பானவர்கள் நிர்ணயிக்கப்படுவதற்காக சபையால் இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயலாற்றல்**

துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபை அதிகாரப்பகுதியில் 102 வீதிகளில் கொங்கிரீட் கற்கள் இடப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 51.6 மில்லியன் தொகையான ஏற்பாடும் 2014 ஆம் ஆண்டில் ஒரு வீதிக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 250,000 தொகையும் உரிய கைத்தொழிலை மேற்கொண்டிராததன் காரணமாக இரத்துச்செய்யப்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்